# வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

**காயல்பட்டணம்**

**நாட்டு நலப்பணித்திட்டம் அணி எண் -187**

**2018-19 சிறப்பு முகாம் அறிக்கை**

**(25.01.19 முதல் 31.01.19)**

**இராணிமகாராஜபுரம்**

அனைவருக்கும் வணக்கம். வாவு வஜீஹா வனிதையர் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட அணி எண் 187ன் சார்பாக சிறப்பு முகாம் 25.01.19 முதல் 31.01.19 வரை ஏழுநாள் நடைபெற்றது.

முகாமின் முதல்நாள் 25.01.19 (வெள்ளிக்கிழமை) அன்று மாலை 7 மணிக்கு இராணிமகாராஜபுரம் அம்மன் கோவில் மைதானத்தில் முகாம் தொடக்க விழா கல்லூரியின் நிறுவனர்-தலைவர் அல்ஹாஜ் வாவு S. செய்யது அப்துர் ரஹ்மான் அவர்கள் தலைமையில் இனிதே நடைபெற்றது.

எம் கல்லூரியின் இரண்டாம் ஆண்டு இயற்பியல் துறை மாணவி வீ. பிளஸ்ஸி வரவேற்புரை வழங்கினார். அதனை தொடர்ந்து கல்லூரியின் செயலாளர் W.M.M. மொகுதஸீம் B.A (CS) மற்றும் துணைச்செயலாளர் ஹாஜி ஹாபிஸ் வாவு S.A.R. அஹமது இஸ்ஹாக் ஆலிம் M.A., Azhari அவர்களும் விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். கல்லூரி முதல்வரும் நாட்டு நலப்பணித்திட்ட தலைவருமான முனைவர் திருமதி இரா.செ. வாசுகி M.A., Ph.D., DGT. அவர்கள் முகாமின் நோக்கங்களை எடுத்துரைத்தார். கல்லூரி இயக்குநர் முனைவர் திருமதி மெர்சி ஹென்றி M.A., Ph.D. அவர்கள் சிறப்புரை வழங்கினார். முதலாம் ஆண்டு கணிதவியல் துறை மாணவி மா. இந்துமதி நன்றியுரை வழங்க நாட்டுபண்ணுடன் விழா தொடக்க நிறைவுற்றது.

26.01.2019 முகாமின் இரண்டாம் நாள் காலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை தினமும் எம் கல்லூரி இரண்டாம் ஆண்டு மாணவிகள் மூலம் யோகா பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சி வகுப்புகளில் எம் கல்லூரி மாணவியர் மட்டுமின்றி ஊர்ப்பொதுமக்களும் கலந்து கொண்டு பயன்பெற்றனர். காலை 8 மணிக்கு குடியரசுத் தினவிழாவில் எம் கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டு இனிப்புகள் வழங்கினார்கள். அதனை தொடர்ந்து “பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி”யில் எம் கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டு அணி வகுத்துச் சென்றனர். அன்று மாலை 4 மணி முதல் 6 மணி வரை பொதுக்கூட்டத்தில் திருநெல்வேலி, தூய யோவான் கல்லூரியின் பேராசிரியர் முனைவர் திரு.இ. கதிரவனர் M.A., M.Phil., Ph.D. அவர்கள் உரையாற்றினார்.

27.01.2019 முகாமின் மூன்றாம் நாள் காலை 10 மணி முதல் 1 மணி வரை எம் மாணவியர் களப்பணியில் ஈடுபட்டு ஊர் வளாகத்தை சுத்தம் செய்யும்

பணியில் ஈடுபட்டனர். அன்று மாலை 6 மணி முதல் 7 மணி வரை வங்கி மேலாளர் திரு R.K. மகேஷ் ராமலிங்கம் அவர்கள் “வேலைவாய்ப்பு பயிற்சி முகாம்” பற்றி சிறப்புரையாற்றினார். இரவு 7 மணி முதல் 9 மணி வரை திருச்செந்தூர், ஆதித்தனர் கல்லூரியின் தமிழ்த்துறை தலைவர் முனைவர் திரு. கு. கதிரேசன் M.A., M.Phil., Ph.D., அவர்கள் நடுவராக “சுகாதாரத்தை பேணுவதில் பெரும் பங்கு பகிப்பவர்கள் ஆண்களா / பெண்களா” என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. இதில் எம் கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டு விவாதித்தனர் அதனை தொடர்ந்து எம் கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

28.01.2019 முகாமின் நான்காம் நாள் காலை 10 மணி முதல் 1 மணி வரை கால்நடை மருத்துவமுகாம் நடைபெற்றது. அன்று மதியம் 2 மணி முதல் 4 மணி வரை எம் கல்லூரி இயற்பியல் துறை தலைவர் திருமதி S. வசுமதி M.Sc., M.Phil., அவர்கள் சிறப்புரை வழங்கினார். மாலை 6 மணி முதல் 7 மணி வரை பொதுக்கூட்டத்தில் தூத்துக்குடி, பிஷப் கால்டுவெல் கல்லூரி, பொருளியல் துறை பேராசிரியர் முனைவர் திரு. து. மோசஸ் ஞானகண் M.A., M.Phil., Ph.D. “தூய்மையும் ஆரோக்கியமும்” என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். அதனை தொடர்ந்து எம் கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

29.01.2019 முகாமின் ஐந்தாம் நாள் காலை 10 மணி முதல் 3 மணி வரை அரசு மருத்துவமனை சித்த மருத்துவர் டாக்டர் M. முருகபொற்செல்வி MD(S) அவர்கள் டெங்கு பற்றிய விழிப்புணர்வு மற்றும் டெங்கு காய்ச்சல் பரவாமல் இருக்க மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் அனைவருக்கும் எடுத்து கூறினார்கள். மாலை 5 மணி முதல் 6 மணி வரை திருநெல்வேலி, புனித சவேரியார் கல்லூரி, பொருளியல் துறை பேராசிரியர் முனைவர் திரு. J. அமல்நாதன் M.A., M.Phil., Ph.D. சிறப்புரையாற்றினார். அதனை தொடர்ந்து எம் கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

31.01.2019 முகாமின் இறுதி நாள் காலை 10 மணி முதல் 4 மணி வரை எம் கல்லூரி மாணவிகள் களப்பணியில் ஈடுபட்டனர். அன்று மாலை 4 மணி முதல் 5 மணி வரை ஊர் பொதுமக்களுக்கும், கல்லூரி மாணவிகளுக்கும் “கைத்தொழில் பயிற்சி” எம் கல்லூரி அராபிக் துறை தலைவர் S.A.K. முத்து மொகுதூம் பாத்திமா M.A., M.Phil., அவர்கள் மூலம் அளிக்கப்பட்டது. அன்று மாலை 5 மணியளவில் முகாமின் நிறைவு விழா நடைபெற்றது. இதில் எம் கல்லூரியின் முதல்வர் முனைவர் திருமதி. இரா. செ. வாசுகி M.A., Ph.D., DGT அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். எம் கல்லூரியின் இயக்குநர் முனைவர் திருமதி மெர்சி ஹென்றி M.A., Ph.D. அவர்கள் சிறப்புரை வழங்கினார். இவையே எங்கள் குழுவினர் இவ்வூரில் ஏழு நாட்கள் சிறப்பு முகாமில் செய்த நாட்டு நலப்பணிகள்.